# பெருநகர சென்னை மாநகராட்சிக்கான சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள்

சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானத்திற்கான வழிகாட்டுதல்கள் மூலம் சென்னையில் நடைபெறும் அனைத்து கட்டிட கட்டுமானங்கள், ரெடி-மிக்ஸ் கான்கிரீட் (RMC) ஆலைகள் மற்றும் பிற கட்டுமானப் பணிகளால் எற்படும் சுற்றுச்சூழல் மாசு அடைதல் மற்றும் பிற இதர பாதிப்புகளில் இருந்து தவிர்க்க முடியும் . மேலும் இந்த வழிகாட்டுதல்கள் மூலம், காற்று மாசுபாட்டைக் குறைத்தல், பொது சுகாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான நகர்ப்புற வளர்ச்சியை உறுதி செய்ய முடியும். காற்று மாசுப்பட்டை ஏற்படுத்தும் கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் காற்று மாசுப்பாட்டை எற்படுத்தும் முக்கிய பொருள்கலான தூசி கொண்ட துகள்கள்(PM10 மற்றும் PM2.5) போன்றவற்றை இந்த வழிகாட்டுதல்கள் மூலம் தவிர்க்க முடியும். கட்டுமானங்களால் காற்றின் தரத்தில் ஏற்படும் தாக்கம் மற்றும் பிற கட்டுமான பொருட்கள், மீண்டும் காற்றில் கலக்கப்படும்போது, காற்றின் தரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன இந்த வழிகாட்டுதல்கள் மூலம் இவை அனைத்தும் தவிர்க்கப்படும் .

காற்று மாசுபாட்டைத் குறைப்பதற்காக கட்டிட கட்டுமானப் பணிகளுக்கு இந்த வழிகாட்டுதல்கள் பரிந்துரைக்கப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் மேற்கொள்ளப்படும் கட்டிடக் கட்டுமானங்கள், RMC/ Batching Plants மற்றும் இதர கட்டுமானப் பணிகளுக்கு இவை பொருந்தும்.

1. ஒரு ஏக்கர் வரை பரப்பளவு கொண்ட திட்டத் தளங்களில், வெளிப்புற இடங்களில் தூசி மற்றும் குப்பைகள் பரவுவதைத் தடுக்க, தளத்தை சுற்றி 6 மீ உயரமுள்ள தகரம்/உலோகத் தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)
2. ஒரு ஏக்கருக்கும் அதிகமான தளப் பரப்பு கொண்ட திட்டத் தளங்களில் அல்லது 70 மீட்டருக்கும் உயரமான கட்டிடங்கள் மற்றும் அனைத்து RMC ஆலைகளிலும், வெளிப்புற இடங்களில் தூசி மற்றும் குப்பைகள் பரவுவதைத் தடுக்க, தளத்தை சுற்றி 10 மீ உயரமுள்ள தகரம்/உலோகத்தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)
3. புதிய கட்டுமானம் அல்லது இடிக்கப்படும் அனைத்துக் கட்டமைப்புகளியிருந்து வெளிவரும் தூசித் துகள்கள் பரவுவதைத் தடுக்க அதிக அடர்த்தி கொண்ட துணி/ தார்ப்பாய்/இரட்டை அடுக்கு பச்சை வலையால் மூடப்பட்டிருக்க வேண்டும். தூசிகள் உருவாகும் பகுதிகளின் தண்ணீர் தெளிப்பான்கள் மூலம் தண்ணீர் தெளித்து தூசி உற்பத்தியைக் கட்டுப்படுத்தவேண்டும் . (**அதிக முக்கியத்துவம்**)
4. இடித்தல், தோண்டுதல், வெட்டுதல், துளையிடுதல், மெருகூட்டுதல், கலக்குதல் போன்ற பணிகளின் போது உருவாகும் தூசிகள் தடுக்கும் நோக்கில் தொடர்ந்து தானாக இயங்கும் தெளிப்பான்கள்/இயந்திர தெளிப்பான்கள் மூலம் தண்ணீர் தெளித்து தூசி மற்றும் குப்பைகள் பரவுவதைத் தடுக்க வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)
5. அனைத்து கட்டுமானப் பொருட்களும், தோண்டப்பட்ட மண் மற்றும் கட்டிட இடிப்பாட்டுக் கழிவுகள் தளத்தில் தனியாக, அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சேமிக்கப்பட வேண்டும், அவை சாலைகள் அல்லது நடைபாதைகளில் கொட்டப்படக்கூடாது மற்றும் அவற்றிலிருந்து காற்றினால் பரவும் தூசிகளைத் தவிர்க்க குறைந்தபட்சம் 200 GSM உயர் அடர்த்தி பாலிஎதிலீன் தாள் / தார்பாலினால் மூடப்பட்டிருக்க வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)

6. தூசித் துகள்களைக் குறைப்பதை உறுதி செய்யும் வகையில் கட்டுமான தளங்களில் உருவாகும் தூசி மற்றும் குப்பைகளை வாருதல், சுத்தம் செய்தல், தண்ணீர் தெளித்தல் மற்றும் துடைத்தல் போன்றவற்றின் மூலம் தளத்தில் வழக்கமான பராமரிப்பை நாள் முழுவதும் கட்டுமான பணி புரிபவர் மேற்கொள்ள வேண்டும். (**நடுத்தர முக்கியத்துவம்**)

7. கட்டுமானத்தின் போது உருவாகும் எந்தவொரு கழிவுப் பொருட்களையும் திறந்த வெளியில் காற்றில் பரவுவதை / கலப்பதை தவிர்க்க மூடப்பட்ட தட்டுகள், தூசிச் சட்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்தி அதற்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். முறையாக மூடப்பட்ட லிப்ட் ஷாஃப்ட்களும் தூசி சேமிப்பானாக பயன்படுத்தப்பட வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)

8. எஞ்சியிருக்கும் அனைத்து கட்டுமானப் பொருட்கள்/ கட்டுமானம் மற்றும் இடிபாடு கழிவுகள் மாநகராட்ச்சியின் கட்டுமான மற்றும் இடிபாட்டு (C&D) கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்களின்படி பிரிக்கப்பட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்பட வேண்டும், மேலும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுமான மற்றும் இடிபாட்டு (C&D) கழிவு மேலாண்மை வழிகாட்டுதல்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சியால் உருவாக்கப்பட்ட கட்டுமான மற்றும் இடிபாட்டு (C&D) கழிவு மேலாண்மை தளங்களுக்கு பிரிக்கப்பட்ட நிலையில் கொண்டு செல்லப்பட வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)

9. பொருட்கள் கட்டிட, இடிப்பாடு கழிவுகள் மற்றும் அதை சார்ந்த கழிவுகளை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களும் காற்று மாசுபடுவதை தவிர்ப்பதற்காக அதிக சுமைகளை ஏற்றிச்செல்லக் கூடாது, மேலும் தூசிகள் பரவுவதைத் தடுக்க அவற்றின் சேமிப்புப் பகுதிகள் சுற்றி மேல் மற்றும் பக்கவாட்டில் உள்ள திறந்த பகுதிகள் முற்றிலும் தார்பாலின் மூலம் மூடப்பட்டிருக்க வேண்டும். போக்குவரத்தின் போது தார்பாலின்கள் சரியாக கட்டப்பட்டு பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)

10. அனைத்து வாகனங்களும் தளத்தில் இருந்து வெளியேறும் முன் தானாக இயங்கும் இயந்திரம்/ கைமுறையாக வாகனங்களின் சக்கரங்களை கழுவுதல் மேற்கொள்ள வேண்டும். நுழைவு/வெளியேறும் இடங்கள் மற்றும் அணுகுச் சாலைகளை அவ்வப்போது சுத்தம் செய்வது, வாகனங்களால் தூசி/சேறுகள் அதை ஒட்டிவுள்ள சாலைகளில் பரவுவதைத் தடுக்க வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)

11. காற்று மாசுபாட்டைத் தணிக்கும் நடவடிக்கைகளைப் பணியாளர்கள் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக, உயரமான கட்டிடத் தளங்களில் (18.5 மீட்டருக்கு மேல்) CCTV கண்காணிப்பை கட்டடம் கட்டுபவர் பயன்படுத்த வேண்டும். CCTV காட்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு தேவைப்படும் பட்சத்தில் ஆய்வுக்கு சமர்பிக்க வேண்டும். (**அதிக முக்கியத்துவம்**)

12. கட்டுமான நிறுவனம், உயரமான கட்டிடத் திட்ட இடங்களில் (கட்டிட உயரம் 18.5 மீட்டருக்கு மேல்) சென்சார் அடிப்படையிலான காற்று மாசை கண்டறியும் கண்காணிப்பு கருவிகளை பயன்படுத்த வேண்டும், குறைந்தபட்சம் இரண்டு சென்சார்கள் முறையே ஒரு கருவி மேல்நோக்கியும் மற்றோரு கருவி கீழ்நோக்கியும் சுற்றளவுக்கேற்ப வைக்கப்பட வேண்டும். கட்டுமான நிறுவனம், தங்கள் தளங்களில் அதிக அளவிளான காற்று மாசு பதிவுகளை கண்டாறிந்தால் உடனடியாகச் செயல்பட

வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்குத் தேவைப்படும்போது ஆய்வுக்காகக் கண்காணிப்பு கருவிகளின் பதிவுகளை காண்பிக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**

13. தளங்களில் செயல்படும் DG செட்கள், LPG/ PNG/ மின்சாரம், எரிபொருள் பயன்முறை போன்ற சுத்தமான எரிபொருளில் இயங்குதல் வேண்டும். மேலும் அவற்றில் மாசு கட்டுப்பாட்டு சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும், மேலும் அவை MoEFCC வழிகாட்டுதல்களின்படி இயக்கப்படுதல் வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**
14. பெரிய அடுக்குமாடி குடியிருப்புகள் , வணிக வளாகங்கள் போன்ற கட்டுமானங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் (Alarm System, Safety measures) கண்டிப்பாக இருத்தல் வேண்டும் **(அதிக முக்கியத்துவம்)**
15. கட்டுமான பொருட்கள், கட்டிட இடிப்பாடு கழிவுகள் மற்றும் அதை சார்ந்த கழிவுகளைக் கொண்டு செல்லும் அனைத்து வாகனங்களும் கட்டாயம் மாசு கட்டுப்பாட்டு சான்றிதழ் வைத்திருக்க வேண்டும். **(அதிக முக்கியத்துவம்)**
16. கட்டிடம் கட்டுபவர் தளத்தில் ஒரு தளப் பொறியாளர்/சுற்றுச்சூழல் பொறியாளர்/திட்ட மேலாளர் அல்லது நிர்வாக மட்டத்தில் பொருத்தமான தள பணியாளர்களை நியமித்து, திட்டத்தின் வாழ்க்கைச் சுழற்சிக்கான காற்று மாசுபாட்டைத் தணிக்கும் வகையில் திட்டத்தை உருவாக்கி, திட்டத்தின் கால சுழற்சிக்கு ஏற்றார்போல் செயல்படுத்திட வேண்டும். **(நடுத்தர முக்கியத்துவம்)**
17. தளத்தில் உள்ள பணியாளர்கள், தொழிலாளர்கள் போன்ற அனைத்து ஊழியர்களுக்கு கட்டிடம் கட்டுபவர் காற்று மாசுபடுதலை தவிர்ப்பது பற்றிய புரிதலை/விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்க வேண்டும். கட்டிடம் கட்டுபவர் ஊழியர்களுக்கு இது தொடர்பான புரிதல் ஏற்படுத்தும் வகையில் அது சம்மந்தமான விழிப்புணர்வு பதாகைகள்/படங்கள் போன்றவற்றை தளத்தில் நிறுவியிருக்க வேண்டும். **(குறைந்த முக்கியத்துவம்)**
18. மாசுபட்ட காற்றில் உள்ள துகள்களை சுவாசிப்பதில் இருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்க, சுவாச முகமூடிகள், கண்ணாடிகள் மற்றும் பாதுகாப்பு கவசங்கள் போன்ற முறையான தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) கிடைக்கச் செய்ய வேண்டும். **(நடுத்தர முக்கியத்துவம்)**

<u>வழிகாட்டுதல்களை மீறுபவர்களுக்கான அபராதம்</u>:

a) பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் காற்று மாசுபாட்டை தவிர்க்கும் நடவடிக்கைகள் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம், மேலும் கட்டடம் கட்டுபவர் , பெருநகர சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கேட்கும் பட்சத்தில் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும், மேலும் தளத்திற்குள் ஆய்வுகள் மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களை அனுமதிக்க வேண்டும்.

b) மேற்கூறிய வழிகாட்டுதல்களை மீறுபவர்களுக்கு கீழ் உள்ளவாறு அபராதம் விதிக்கப்படும்:

| வரிசை எண் | திட்டத்தின் பரப்பளவு | அதிக முக்கியத்துவம் வாய்ந்த இனங்களுக்கு அபராதம் | குறைந்த மற்றும் நடுத்தர முக்கியத்துவம் வாய்ந்த இனங்களுக்கு அபராதம் |
|---|---|---|---|
| 1 | 20,000 ச.மீட்டருக்கு(BUA) அதிகமான பரப்பளவு உள்ள தளங்களில் வழிகாட்டு விதிமீறுதலுக்கு | Rs. 5,00,000/- | Rs.1,00,000 |
| 2 | 500 ச.மீ க்கு மேல் 20,000 ச.மீ-வரை பரப்பளவில் (BUA) அமைந்துள்ள தளங்களில் வழிகாட்டு விதிமீறுதலுக்கு | Rs. 25,000/- | Rs.10,000 |
| 3 | 300 ச.மீ முதல் 500 ச.மீ பரப்பளவில் (BUA) அமைந்துள்ள தளங்களில் வழிகாட்டு விதிமீறுதலுக்கு | Rs. 10,000/- | Rs.1000 |

நடுத்தர/குறைந்த முக்கியத்துவம் கொண்ட வழிகாட்டுதல்களில் விதி மீறல்கள் ஏற்பட்டால், மீறல்களை சரிசெய்வதற்கான எச்சரிக்கை அறிவிப்பு வழங்கப்பட்டு அதை சரி செய்வதற்கு 15 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும். 15 நாட்களுக்கு பிறகும் சரிசெய்யாவிட்டால் பரப்பளவிற்கு ஏற்றவாறு அபராதம் விதிக்கப்படும். அதன் பிறகு 7 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும் அதன் பிறகும் சரிசெய்யாவிட்டால் கட்டுமான நடவடிக்கைகள் நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.

அதிக முக்கியத்துவம் வாய்ந்த விதிமீறல்கள் சரிசெய்வதற்கான அறிவிப்பு வழங்கப்பட்டு அதை சரி செய்வதற்கு 15 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும். 15 நாட்களுக்கு பிறகும் சரிசெய்யாவிட்டால் பரப்பளவிற்கு ஏற்றவாறு அபராதம் விதிக்கப்படும். அதன் பிறகு 7 நாட்கள் அவகாசம் அளிக்கப்படும் அதன் பிறகும் சரிசெய்யாவிட்டால் கட்டுமான நடவடிக்கைகள் நிறுத்த உத்தரவு பிறப்பிக்கப்படும்.